# வட இலங்கையின் தொல்லியல் மரபுரிமை சின்னங்களும், அவற்றின் முகாமைத்துவமும் (யாழ் குடாநாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

S.Sivachchelvy
University of Peradeniya
s.selvy91@gmail.com

*ஆய்வுச்சுருக்கம்*

வட இலங்கையின் யாழ்குடாநாடனது தனக்கென தனித்துவமான பாரம்பரிய வரலாறு கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதை வரலாற்று மூலங்கள் மட்டுமன்றி இதுவரை இடம்பெற்ற தொல்லியலாய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. நீண்ட தொடர்ச்சியான தனித்துவமான வரலாற்றினை யாழ்குடாநாடானது கொண்டிருந்தாலும் இவ் வரலாற்றினை பிரதிபலிக்கும் வகையிலான தொல்லியல் மரபுரிமைச்சின்னங்கள் காலத்திற்க்கு காலம் பல்வேறு சூழ்நிலைகளால் அழிவுக்குட்பட்ட நிலையில் மிக குறைவடைந்த நிலையிலும் எஞ்சியவை மிக விரைவில் பாதுகாப்பிற்குட்படுத்த வேண்டிய நிலையிலுமே காணப்படுகின்றது.

இவ்வாறு எஞ்சியுள்ள யாழ்குடாநாட்டின் தொல்லியல் மரபுரிமைச்சின்னங்கள் கூட ஓர் முழுமையான முகாமைத்துவத்திற்க்குள் உட்படுத்தப்படவில்லையென்றே கூறலாம். ஒரு சில தொல்லியல் மரபுரிமை சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டாலும் கூட அவை எதிர்கால திட்டமிடலின் அடிப்படையில் பாதுகாக்கப்படவில்லை என்றே கூறலாம். எனவே இவ்வாய்வின் நோக்கங்களில் ஒன்றாக யாழ் குடாநாட்டின் முக்கிய தொல்லியல் மரபுரிமைச்சின்னங்களான புராதன குடியிருப்பு மையங்கள், பாரம்பரிய பாவனைப்பொருட்கள், தென்மைவாய்ந்த சமய சார்பான மரபுரிமைகள் (இந்து, பௌத்த, இஸ்லாமிய), யாழ்ப்பாண இராசதானி கால நினைவுச்சின்னங்கள், ஜரோப்பியர் கால கோட்டைகள், நிர்வாக மையங்கள், வெளிச்ச வீடுகள், பராம்பரிய வீடுகள், தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் காணப்படும் இடங்கள் என்பவற்றை அடையாளப்படுத்தல், அவற்றின் வரலாற்று முக்கியத்துவம், சிறப்பு என்பவற்றை எடுத்துக் கூறி அவற்றினை பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் விழிப்புணர்வையும் சமுதாயத்தில் ஏற்படுத்துவதாகும்.

யாழ் குடாநாட்டின் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கையில் மிக அண்மைகாலமாக இலங்கைத் தொல்லியல் திணைக்களம், மத்திய கலாசார நிதியம் போன்றன ஈடுபட்டு வருகின்றது. எனினும் ஓர் முழுமையான ஆவணப்படுத்தல், பாதுகாப்பு நடவடிக்கை இடம்பெற வேண்டுமாயின் இவ் நிறுவனங்களின் செயற்பாடுகள் மட்டுமல்லாது தொல்லியல் மரபுரிமைச்சின்னங்களின் பாதுகாப்பில் உள்ளூர் சமூக நிறுவனங்கள், அபிவிருத்தி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மரபுவழியாக மரபுரிமை சொத்துக்களை பாதுகாப்பவர்கள், அரச தொண்டு நிறுவனங்கள், தனியார் துறையினர் போன்றவர்களையும் ஈடுபட செய்வதும் இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாகும்.

இதனூடாக இம் மரபுரிமைச் சின்னங்களினை அவற்றின் பழமை மாறாத வகையில் பாதுகாப்பதுடன், திருப்பி பெற முடியதான அரும்பெரும் பொக்கிஷங்களான இவ் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களை எதிர்கால சந்ததியினரிடம் சரியான வகையில் கையளிப்பதாகும்.

மரபுரிமைச்சின்னங்களின் முகாமைத்துவம் என்ற கோட்பாட்டினுள் பராமரிப்பு, பத்திரப்படுத்துதல், புதுப்பித்தல், பலப்படுத்துதல், மீள்நிர்மாணம், மீள்உற்பத்தி போன்றன உள்ளடங்கும். மரபுரிமைச் சின்னங்களினதும், அவற்றின் கலாச்சார வரலாற்று பெறுமதியின் ஆயுட்காலத்தினையும் அதிகரிப்பதே அவற்றை பாதுகாப்பதன் முக்கிய நோக்கமாகும். இந்த வகையில் யாழ் குடாநாட்டின் தொல்லியல் மரபுரிமைச்சின்னங்களினை அதன் பழமை மாறாத வகையில் எவ்வாறான வழிமுறைகளை கையாள முடியும் என்பதை எடுத்துக் கூறுவதும் இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாகும்.

உலகின் பிற பகுதிகளில் காணப்படுவதைப் போன்று உரிய முறையில் பாதுகாப்பதன் மூலம் தொல்லியல் மரபுரிமைச்சின்னங்களை அழிவிலிருந்து தடுப்பதுடன் சிறந்த தொல்லியல் சுற்றுலா மையங்களாக திகழவைக்க முடியும். ஆகவே யாழ்குடாநாட்டின் மரபுரிமைச் சின்னங்களை முறைப்படி முகாமைப்படுத்துவதன் ஊடாக நாட்டு மக்களுக்கு விளக்கமளித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவற்றினை முழுவதுமாக பாதுகாத்து, சுற்றுலாத்துறையின் அதியுன்னத வளர்ச்சிக்கு வழிசமைப்பதுடன் இதனூடாக இப் பிரதேசத்தின் அரசியல், பொருளதார, பண்பாட்டு வளர்ச்சிக்கும் பங்களிப்பு நல்க முடியும்.

திறவுச்சொற்கள்:-மரபுரிமை, வரலாறு, தொல்லியல், சுற்றுலா, மக்கள்

**அறிமுகம்**

*வட இலங்கையானது தற்போதைய யாழ்ப்பாண குடாநாடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வரலாற்று தொன்மை மிக்க ஓர் பிரதேசமாகும். இதன் எல்லைகள், மாவட்டப்பெயர்கள் நிர்வாக வசதிக்காக காலத்திற்க்கு காலம் மாற்றியமைக்கப்பட்டு வந்தாலும் பொதுவாக அநுராதபுரத்திற்க்கு வடக்கிலமைந்த இப்பிராந்தியம் பண்டு தொட்டு தனியொரு பிராந்தியமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகின்றது. இற்றைக்கு* 2500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு கொண்ட வட இலங்கை பண்டு தொட்டு இலங்கை வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளம் காணப்பட்டுள்ளது. 15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பெறுவதற்கு முன்னர் நாகதீப(ம்), நாகநாடு, நாகபூமி எனத் தனித்துவமான பிராந்தியமாக பாளி, தமிழ், சிங்கள இலக்கியங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் குறிப்பிலும் “நாகடிப” எனவும் அழைக்கப்படுகின்றது. இக் கருத்தினை பிராமிச் சாசனங்கள் பலவும் உறுதிப்படுத்துகின்றன. 1936 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வல்லிபுரம் என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வல்லிபுர பெற்சாசனத்தில ‘“நகதிவ” த்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. இங்கு

குறிப்பிடப்பட்டிருக்கும் "நகதிவ" என்னும் பெயர் பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாகதீபம் என்பதில் எந்த ஐயமுமில்லை. ஆயினும் இதன் தொன்மையான தொடர்ச்சியான வரலாறு 16 ஆம் நூற்றாண்டு வரை வரலாற்று இலக்கியங்களில் குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் 1970 களின் பின்னர் இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளும், தொல்லியல் அகழ்வாய்வுகளும் வட இலங்கையின் வரலாற்றிற்கு புது வெளிச்சமூட்டுவனவாக உள்ளன. மேலும் வட இலங்கையில் குறிப்பாக யாழ் குடாநாட்டின் தொன்மையான வரலாற்றினை பறை சாற்றுவதாய் இன்று இங்கு எஞ்சியிருக்கும் தொல்லியல் மரபுரிமை சின்னங்கள் விளங்குகின்றன.

பொதுவாக ஒருநாட்டின் அல்லது பிரதேசத்தின் மரபுரிமையானது இயற்கை மரபுரிமை, கலாச்சார மரபுரிமை என இரு பிரிவாக பார்க்கப்படுகின்றது. இதில் கலாச்சார மரபுரிமையானது கட்டடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், நினைவுச்சின்னங்கள், தொல்பொருட்கள், கலைப்பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். கலாச்சார மரபுரிமையானது ஒரு குழு அல்லது சமூகத்தால் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டதும் நிகழ்காலத்தில் தொடர்ந்து பாரமரிக்கப்படுவதும் எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினரின் நலனுக்காக கொடுக்கப்பட வேண்டியதுமாகும். கலாச்சார மரபுரிமையின் அரிய பொக்கிஷங்களை பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்தல் என்பது கலாச்சார சூழல், தொல்லியல் ஆய்வு இடங்கள், வரலாற்று ஆவணங்கள், சமூக நிறுவனங்கள் வெளிப்படுத்துகின்ற கலாச்சாரம், புராதன கட்டிடங்கள், சமய நம்பிக்கைகள், கைத்தொழில் மரபுரிமை, கலைப்பொருட்கள் தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஆன்மிக தலங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இவ் கலாசார மரபுரிமையானது தொட்டுணரக் கூடிய மரபுரிமை (Tangible) தொட்டுணர முடியாத மரபுரிமை (Intangible) என இரு பிரிவாக பார்க்கப்படுகின்றது. இங்கு தொட்டுணரக் கூடிய கலாசார மரபுரிமையின் அம்சங்களே தொல்லியல் மரபுரிமையாக பார்க்கப்படுகின்றது. தொல்லியல் மரபுரிமைகள் எனும் போது அவை அசையக் கூடிய மரபுரிமைச் சின்னங்கள் (Movable), அசைய முடியாத (Inmovable) தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் என மேலும் இருவகையாக நோக்கப்படுகின்றது. அசைய முடியாத தொல்லியல் மரபுரிமையின் கீழ் புராதன குடியிருப்பு மையங்கள், புராதன சின்னங்கள், புராதன கட்டிடங்கள், தொல்லியல் மையங்கள் போன்றனவும் அசையக் கூடிய தொல்லியல் மரபுரிமையின் கீழ் மட்பாண்டங்கள், நாணயங்கள், புராதன பாவனைப் பொருட்கள் மற்றும் ஏனைய தொல்லியல் எச்சங்கள் என்பன அடங்குகின்றன.

யாழ்குடாநாடானது வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், அயலில் உள்ள தீவுக்கூட்டங்கள் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். யாழ் குடாநாட்டின் அசைய முடியாத தொல்லியல் மரபுரிமைகளாக இந்து, பௌத்த, இஸ்லாமிய மதம் தொடர்பான மையங்கள், யாழ்ப்பாண அரச மரபு சார்ந்த நினைவுச் சின்னங்கள், ஐரோப்பியர் கால நினைவுச் சின்னங்கள் என பல்லினப் பண்பாட்டினை பிரதிபலிப்பதாய் அமைந்துள்ளன.

**மரபுரிமை (Heritage) என்றால் என்ன?**

மரபுரிமை என்பது முன்னைய சந்ததிகளிலிருந்து கொண்டுவரப்படுவதாகும். இது பாரம்பரியம் அல்லது முன்னோர்களால் வைத்திருக்கப்பட்ட உருவமற்ற சொத்து அல்லது கலை அல்லது சம்பிரதாயத்தால் கொண்டுவரப்படும் நடைமுறைகள், கட்டடங்கள், சமூகம், மற்றும் கலாசாரம் போன்றவற்றிற்கு முக்கியமாக கருதப்படும் வரலாறு, நம்பிக்கைகள் போன்றவற்றை குறிக்கும். இதனால் மரபுரிமை என்பது வரலாற்றுச் சூழலின் ஒரு உள்ளீட்டு அங்கமாக கொள்ளப்படும். ஆனால், இதனை ஒரு விடயமாக மட்டும் வரைவிலக்கணப்படுத்த முடியாது. இது பல்வேறு அம்சங்களின் தொகுப்பாகும். பண்பு, அடையாளம், கலாசாரவேறுபாடு என்பன காலந்தோறும் கட்டியெழுப்பப்படும். இவற்றின் கலவை ஒரு இடத்தின் மரபுரிமையை உருவாக்க பயன்படும்.

1) தொல்பொருளியல் மரபுரிமை:- முக்கியமான கண்ணுக்கு புலப்படக்கூடிய பெருட்கள் உதாரணம்- பாழடைந்த மலைக்கோட்டை, புதைகுழிகள், புராதன கிராமங்கள், அகழி
2) கட்டட மரபுரிமை:- உள்ளூர் முக்கியான கட்டட மரபுரிமை அம்சங்கள் உதாரணம்- பாலம், கதவு, ஞாபகபொருட்கள், மைல்கல், களஞ்சியம், சுவர்
3) பாரம்பரியம் மற்றும் வழக்கம்:- நிலத்தோடு தொடர்புடைய வரலாற்று கலாசார விடயங்கள் மற்றும் உள்ளூர் மக்களின்செயற்பாடுகள்.
   உதாரணம்-மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், வேலை செய்தார்கள், இடங்களின் பெயர்கள், எல்லைகள், முக்கியமான மரபுரிமை பெறுமானங்களின் உரிமைகள், இது நாட்டு ஒழுங்கைகள், வீதிகளைக் குறிக்கும்.
4) கைத்தொழில் மரபுரிமை:- முக்கியமான கைத்தொழில்களின் பௌதீக அம்சங்கள் உதாரணமாக :- சமயல் புகைக்கூடு, கால்வாய், சுரங்க இயந்திரசாலை, சுண்ணாம்புகல், எரிக்கும் அடுப்பு
5) இயற்கை மரபுரிமை:-கிராமபுறம் மற்றும் இயற்கை சூழலை உள்ளடக்கிய இயற்கை பொருட்கள் மற்றும் தொட்டு உணரமுடியாத விடயங்களையும் உள்ளடக்கியது. தாவரங்கள் விலங்குகளைக் கொண்டது. விஞ்ஞான ரீதியான பல்வகைமை - சூழலியல் என குறிப்பிடப்படும்.

**யாழ்ப்பாணத்தில் உள்ள மரபுரிமைச் சின்னங்கள்**

பல்லினப்பண்பாடு கொண்ட யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மை இனமாக தமிழரும், இந்து மதமும் காணப்பட்டாலும் பண்டு தொட்டு பல இனங்கள், பல மதங்கள் பல நாட்டுப் பண்பாடுகள் தொடர்பு கொண்டு இப்பிராந்திய பண்பாடு வளர்ந்ததற்கான மரபுரிமைச் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆதி இரும்புக்கால மக்கள் அமைத்த ஈமச்சின்னங்கள், பாரம்பரிய வீடுகள், பழைமை வாய்ந்த வீதிகளில் அமைக்கப்பட்ட மடங்கள், கேணிகள், ஆவுரஞ்சிக்கற்கள், சுமைதாங்கிகள், இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆலயங்கள், அரசதலைநகரங்கள், இயற்கைத் துறைமுகங்கள் மற்றும் சுற்றுலா மையங்கள், ஐரோப்பியர் காலக் கோட்டைகள், வெளிச்சவீடுகள், நிர்வாக மையங்கள், கல்லூரிகள், வீடுகள் என்பவற்றை யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச்சின்னங்களாகக் குறிப்பிடலாம்.

**மரபுரிமை பாதுகாப்பு**

பேராசிரியர் Derek Linstrum என்பவரின் கருத்துப்படி பாதுகாத்தல் என்பது “பல்வேறு வழிகளாலும் அடையப்படக்கூடிய நீண்ட காலம் நிலைக்கக் கூடிய அமைப்பான, பிரயோசனமான வாழ்க்கையின் தொடர்ச்சி” ஆகும். இதன் கருத்து என்னவென்றால் பராமரிப்பு, திருத்துதல், மீள்நிர்மாணம், புனர்வாழ்வு, மாற்றி அமைத்தல் என்பவற்றன் ஊடாக வாழ்க்கைக்காலத்தை அதிகரிக்கச் செய்தல். மரபுரிமையை நாம் படைக்கவில்லை. அது எமது மூதாதையினரால் படைக்கப்பட்ட விலைமதிக்க முடியாத சொத்தாகும். அது மீண்டும் பொருத்திப்பாக்க முடியாத சொத்துக்களில் ஒன்றாகும். இதனால் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதென்பது எதிர்காலச் சந்ததியின் நன்மையைக் கருத்தில் கொண்டதாகும்.

**பாதுகாப்பு வழிமுறைகள்**

**தொல்பொருளியல் திணைக்களம்**

இலங்கையில் உள்ள மரபுரிமை சொத்துக்களை முகாமை செய்வதற்கான அமைப்பாக தொல்பொருளியல் தினணக்களம் காணப்படுகிறது. இலங்கையின் கலாசார சொத்துக்களை பாதுகாத்தல், மற்றும் மீள் நிர்மாணம் செய்தல், தொல்பொருளியல் ஆய்வுகளில் ஈடுபடவிரும்பும் ஏதாவதொரு நிறுவனமோ தனிப்பட்ட நபரோ இந்த திணைக்களத்தின் அதிகாரத்தை, அனுமதியை பெற்றிருக்க வேண்டும். தொல்பொருளியல் தினணக்களத்தின் அதிகாரத்தின் கீழ் வேலை செய்யும் அமைப்பாக மத்திய கலாசார நிதியம்(The central cultural fund) உள்ளது. இந் நிறுவனம் வெளிநாட்டு நிதி மற்றும் யுனெஸ்கோ உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**நோக்கங்களும் செயற்பாடுகளும்**

1. புராதன நினைவுச்சின்னங்கள் மற்றும் ஏனைய கலாசார சொத்துக்களை பாதுகாத்தல்.
2. அகழ்வு பொருட்கள் மற்றும் ஆய்வுகளை கண்டு பிடித்தல், எழுத்து சாசனம், முகாமைத்துவம் மற்றும் கலாசார வரலாற்று பெறுமதி வாய்ந்த இடங்கள் மற்றும் அவற்றை பதிவு செய்தல்.
3. புராதன சின்னங்கள் மற்றும் கலாசார சொத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் காட்சிப்படுத்தல்.
4. புராதன சின்னங்கள் குறித்து ஆய்வு செய்தலும் அவற்றை பற்றி தகவல்களை பிரசுரித்தல்.
5. Antiquities Ordinance(பண்டைய பொருட்கள் பாதுகாப்பு சட்டம்) ஆல் இயற்றப்படும் சட்டங்களை அமுல் செய்தல்.
6. நூதனசாலைகள், தொல்பொருட்கள், மற்றும் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களை பாதுகாத்தலும் பராமரித்தலும்.
7. எழுத்துச்சாதனங்கள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகளை, அவற்றின் மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பு செய்தல்.
8. ஏற்றுக்கொள்ளக் கூடிய தொல்லியல் முறைகளைப் பயன்படுத்தி புராதன கட்டடங்களைப் பாதுகாத்தல்.

**கலாசார மரபுகளைப் பாதுகாத்தல் தொடர்பான சாசனங்கள்**

- 1964 ஞாபகச் சின்னங்களை புதுப்பித்தல் தொடர்பான முதலாவது சர்வதேச ஏதென்ஸ் சாசனம்.
- 1987 வரலாற்று நகரங்கள் மற்றும் பெருநகர இடங்களை பாதுகாத்தல் தொடர்பான சாசனம்.
- 1990 தொல்லியல் மரபுகளின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பிற்கான சாசனம்.
- 1993 தலங்கள், நினைவுச்சின்னங்கள் மொத்த விடயங்களைப் பாதுகாத்தலுக்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சிகளுக்குரிய வழிகாட்டி.
- 1996 நீருக்கடியிலான கலாசார மரபுகளின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பிற்கான சாசனம்.
- 1999 கலாசார சுற்றுலா தொடர்பான சர்வதேச சாசனம்.
- 1999 வரலாற்று மரபு அமைப்புக்களை பாதுகாத்தலிற்கான கொள்கைகள்.
- 2003 தொல்லியல் மரபுகளைப் புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பகுத்தலுக்குரிய கொள்கைகள் தொடர்பான சாசனம்.
- 2003 சுவர் ஓவியங்களைப் புதுப்பித்தல் பாதுகாத்தலிற்கான கொள்கைகள்.
- 2008 கலாசார மரபுத் தலங்களைப பாதுகாத்தல் மற்றும் அர்த்தம் கூறல் தொடர்பான சாசனம்.
- 2008 கலாசார பாதைகள் தொடர்பான சாசனம்.
- 2013 கலாசார இடங்களைப் பாதுகாத்தல் தொடர்பான சாசனம்.

**மரபுரிமைச்சின்னங்களை பாதுகாத்தல் தொடர்பான புனர்நிர்மான நடைமுறைகள்**

**கட்டட புனர்நிர்மான நடைமுறைகள்**

1. புராதன காலத்தில் செங்கட்டிகளால் அமைக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் ஒவ்வொன்றையும் பழமைமாறாத வகையில் புனர்நிர்மாணம் செய்தல்.
    a) முற்றாக அழிவடையாத ஒவ்வொரு பகுதிச் சுவர்களையும் பாதுகாப்பதுடன், சிதைவுக்குள்ளான பகுதிகளில் பாதுகாப்பான மேற்படையாக 3 தொடர் வரிகளில் செங்கட்டிகளால் சேர்த்துக் கட்டுதல் வேண்டும். புதிய செங்கட்டி வரிசைகளை 1 4 அங்குல தடிப்பில் வைத்துக்கட்டுதல் வேண்டும். இப்புதிய செங்கட்டி வரிகள் பழையதிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படல் வேண்டும்.
    b) செங்கட்டிக் கட்டடங்கள் போதுமான அளவு மரம், தீராந்திகளினால் முட்டுக் கொடுக்கப்பட்ட பின்பு வேலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு மேற்கொள்வதனால் மேற்கட்டுக்கள், அத்திவாரங்கள் பலப்படுத்துவதுடன் உறுதியும் பெறுகின்றன. அத்தோடு புதிய வரிகளும் இணைக்கப்படுகின்றன.
    c) பிரித்தெடுக்கப்படும் செங்கட்டிகள் சரியான ஒழுங்கில் இலக்கம் இடப்படுவதுடன், அதன் பின்பு அகற்றப்பட்டு இறுதியாக ஒழுங்கமைக்கப்பட்டு மீள உரிய இடத்தில் வைத்துக் கட்டுதல் வேண்டும்.
    d) பழமையான சுவர்களின் செங்கட்டிகள் சேதமடைந்து இருக்கும் பட்சத்தில் செங்கட்டிச் சுவர்களின் பகுதிகள் மீள அமைக்கப்படுகின்றன. பழைய முகப்பிலிருந்து 4 அங்குலத்திற்குப் புதிய செங்கட்டிகள் மீள வைக்கப்படுகின்றன. இவ்வாறாக

மீளமைக்கப்பட்ட பகுதி பழமையானதாகவும், அழகானதாகவும் காணப்படும்.

**பொதுவான விடயங்கள்**

தொல்பொருட்களை மீள்புனரமைப்பு செய்யும் போது அதே இடத்தில் செய்ய வேண்டும். இடம் மாற்றக் கூடாது. அதீத நிலைமைகளில் மட்டும் பொருட்கள், மூலங்கள் அல்லது முழுமையான நினைவுச் சின்னம் ஸ்தலத்திருந்து அப்புறப்படுத்தப்படலாம். கலைகளின் அழகு, வரலாற்று விழுமியங்கள் மற்றும் கலாசாரச் சொத்துக்களின் பாரம்பரியங்கள் மாறாத வகையில் பௌதிக தன்மை சீரிய நிலையில் ஆளப்படல் வேண்டும். இன்றைய கட்டட தொழில் நுட்பத்தை விடுத்து பாரம்பரியமாக பின்பற்றப்பட்ட தொழில்நுட்பத்திற்கு அமைவாக கட்டடங்கள் அமைக்கப்படல் வேண்டும். பொருந்தக் கூடிய மீள்புனரமைப்பினைப் பயன்படுத்தி நினைவுச் சின்னத்தின் விழுமியங்களை மதித்தல் வேண்டும்.

**ஆவணப்படுத்தல்**

பாதுகாத்தல், புதுப்பித்தல், அகழ்தல் போன்ற எல்லா வேலைகளிலும் சுருக்கமாக ஆவணப்படுத்தல் அமைய வேண்டும். அவை பகுத்து ஆராயப்பட்ட அறிக்கை வடிவங்களாகப் படங்கள் மற்றும் சித்திரங்கள் மூலம் விவரிக்கப்பட்ட ஒன்றாக அமைய வேண்டும். துப்பரவு, பலப்படுத்தல், மீளமைத்தல், ஒன்றாக்கல், மற்றும் வேலையின் போது அடையாளம் காணப்பட்ட முறையான தொழில்நுட்ப அம்சம் என்பவற்றின் ஒவ்வொரு பகுதிகளும் உள்ளடக்கப்பட வேண்டும். இவ் ஆவணமானது பேணப்பட்டு அறிக்கையாக வெளியிடப்பட வேண்டும்.

**சிதைவடைதலைத் தடுத்தல்**

ஈரப்பதன், தீ, ஒளி, காற்று, மழை, களவு, போன்றவற்றினால் மரபுரிமைச் சின்னங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுத்தல்.

**பத்திரப்படுத்தல்**

காணப்படும் நிலையில் நினைவுச்சின்னத்தை தொடர்ச்சியாக பேணல்.

**பலப்படுத்தல்**

பொருத்தமான பொருட்களைப் பயன்படுத்தி மரபுரிமைச் சின்னங்களை பலப்படுத்தல்.

**புதுப்பித்தல்**

மூல எண்ணக்கருவை புதுப்பித்தல் அல்லது மரபுரிமைச்சின்னத்தின் தெளிவான தன்மையை புதுப்பித்தல். இதன் இலக்கானது மரபுரிமைச் சின்னத்தின் வரலாற்று விழுமியங்களையும், கலை அம்சங்களையும் பேணுவதுமாகும்.

**மீள் உற்பத்தி**

இழந்த அல்லது அழிந்த பகுதிகளை கலையம்ச பொருத்தப்பாட்டிற்கு ஏற்ற விதத்தில் மீள் உற்பத்தி செய்தல்.

**மீள் கட்டுமானம்**

புதிய பொருட்களை, நுட்பங்களைப் பயன்படுத்தி விஞ்ஞான ஆதாரங்கள் மற்றும் சரியான ஆவணங்களின் அடிப்படையில் மரபுரிமைச் சின்னத்தின் முழுவதையும் அல்லது பகுதியையும் மீள்கட்டுமானம் செய்தல்.

**கல்வி மற்றும் பயிற்சி**

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தினால் ஆன ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படல் வேண்டும். இவ்வாறான பயிற்சித் திட்டத்தினுள் சிறப்பாக கட்டடக் கலைஞர்கள், அரும்பொருட்பாதுகாவலர்கள், தொல்லியல் வல்லுனர்கள், கைவினைக் கலைஞர்கள் உட்பட பாரம்பரிய பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் உட்பட எல்லாத் தொழில்வல்லுனர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**தலையீடுகள்**

வரலாற்றுப் புகழ்மிக்க மரத்தினால் ஆன கட்டடங்களை மீள் புனரமைப்பு செய்யும் போது அதற்காகப் பயன்படுத்தப்படும் ஏனைய பொருட்களை அத்தொல்பொருட் சின்னத்தின் பழமை மாறாத வகையில் திருத்தி அமைத்தல் வேண்டும். இவ்வாறான பழமையான தொல்பொருட் சின்னங்கள் அக்காலத்தின் காலநிலைகளுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்படுகின்றன. கட்டட நிர்மாணங்கள், கூரை அமைப்புக்கள், பூச்சு, மேல் வர்ணப்பூச்சு, சுவரில் தொங்கவிடப்படும் அலங்காரப் பொருட்கள், தளத்திற்குரிய மூலப்பொருட்கள் போன்றன அக்கால காலநிலைக்கு ஏற்பத் தெரிவு செய்யப்படுகின்றது. இவ்வாறான மீள்நிர்மாண வேலைகள் நடைபெறுகின்ற போது தொல்லியல் சின்னத்தில் எவ்வித பாதிப்போ, மாற்றமோ ஏற்படாத வகையில் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**திருத்த வேலைகளும் பிரதியீடுகளும்**

தற்பொழுது கண்டுபிடிக்கப்படும் பொருட்கள் இயலுமானவரை பாதுகாக்கப்படல் வேண்டும். வரலாற்றுப் புகழ் மிக்க கட்டடங்களில் எதுவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படக் கூடாது. வெனிஸ் சாசனத்தின் 11ஆம் இலக்க சாசனத்தின் பிரகாரம் குறிப்பிடப்படும் கொள்கைகளுக்கு அமையவே எல்லா வேலைகளும் மேற்கொள்ளல் அவசியமாகும். கட்டட பாகங்கள் அகற்றப்படும் போது அதனுடைய மாதிரிகள் பத்திரப்படுத்தி ஆவணப்படுத்துவது அவசியமானதாகும்.

**மரபுரிமைச் சின்னங்கள் ஏன் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்?**

கடந்த 30 வருடங்களாக வட பகுதியில் ஏற்பட்ட குழப்ப நிலைகள் காரணமாக யாழ் குடாநாட்டிலுள்ள மரபுரிமைச் சின்னங்கள் துரதிஸ்டவசமாக கவனம் செலுத்தப்படாது விடப்பட்டன. இதனால் இங்குள்ள மரபுரிமைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் அவசியமாகின்றது. இச் சின்னங்களை முகாமைத்துவம் செய்வதனால் கடந்த காலத்தில் எமது பண்பாடு எப்படி இருந்தது என்பது பற்றி அறியவும், வெற்றிகரமான பண்பாட்டு எதிர்காலத்திற்கு மரபுரிமைச் சின்னங்கள்

அவசியம். மரபுரிமைச் சின்னமானது ஓர் இடத்திற்கு கலாசார பெறுமதியைக் கொடுக்கின்றது. இது கல்வி ரீதியான பெறுமானத்தை கொண்டிருப்பதனால் எமது மூதாதையர் மற்றும் சமூகத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி அறியக் கூடியதாக உள்ளது. மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதன் மூலம் புதிய சந்ததியினருக்கு கடந்த காலம் மற்றும் அவர்களின் கலாசாரம் பற்றி அறிய உதவுகின்றது.

கலாசார சொத்துக்களின் முகாமைத்துவத்தின் மூலமாக நாட்டு மக்களுக்கு விளக்கமளித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவற்றினை முழுவதுமாக பாதுகாத்து, உல்லாச பிரயாணத்துறையின் அதியுன்னத வளர்ச்சிக்கு வழிசமைத்துக்கொடுத்தல். மக்கள் விரும்பி வாழக் கூடிய, வேலை செய்யக் கூடிய சமூகங்களையும் உருவாக்கி, மக்களுக்கு உற்சாகம் மற்றும் சந்தோசத்தை கொடுப்பதில் மரபுரிமைச் சின்னங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கடந்த காலம், நிகழ்காலம், மக்களின் வாழ்க்கை அனுபவத்தில் முக்கிய பங்கு வகித்து நகர நிர்மாணம், இட அமைவு என்பவற்றில் கட்டட, கலை மற்றும் வரலாற்று விருப்பத்தை மக்களிடம் வளர்க்கின்றது.

ஒரு கவர்ச்சிகரமான மரபுரிமைச் சூழல் வெளி முதலீடுகளை ஊக்குவிப்பதுடன் சுற்றுலாத்துறை சாராத வேறு வாணிப முயற்சிகளையும் ஊக்குவிக்கின்றது. மரபுரிமை மீது கவனம் செலுத்துவதன் மூலம் அதிகரித்த சமூகப் பெறுமதி மற்றும் சமூக உள்ளடக்கத்தை பெறலாம். எல்லா சமூகங்களையும் ஒன்றிணைப்பதுடன் மக்களுக்கு கலாசார அடையாளத்தையும் கொடுக்கின்றது.

மரபுரிமை முகாமைத்துவம் என்பது மரபுரிமை வளங்களை முகாமை செய்யும் செயற்பாடு ஆகும். உதாரணமாக கலை மற்றும் மரபுரிமை இது கலாசார மரபுரிமை முகாமைத்துவத்தை உள்ளடக்குகிறது. இது பாரம்பரிய மற்றும் வரலாற்று கலாசாரம் மற்றும் கட்டடக்கலை கலாசாரம், போன்றவற்றுடன் தொடர்புடையது. கலாசார வளங்களின் முகாமைத்துவமானது தற்போதைய கலாசாரம், வளர்ந்து வரும் புத்தாக்க கலாசாரம், நவீன கலாசாரம், என்பதை குறிக்கிறது. இது சாதாரணமாக பாரம்பரிய கலாசார வடிவங்களை பாதுகாத்தல் என்பதை மட்டும் குறிக்காது, கலாசார வளங்களின் பௌதீக சொத்து மற்றும் தொல்பொருளியல், கட்டிடக்கலை, படம் வரைதல் மற்றும் தொட்டுணர முடியாத கலாசாரம் என்பவற்றை உள்ளடக்குகிறது. கலாசார வளமுகாமையாளர்கள் மரபுரிமை இடங்கள், நூதனசாலை, நாடகஅரங்கு போன்றவற்றிற்கு பொறுப்பாக இருப்பர். சுற்றுலாத்துறையில் கலாசார சுற்றுலா முக்கியமான விடயமாகும், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கலாசார வளமுகாமையானது பெரிய கருப்பொருட்களைக் கொண்டது. உதாரணமாக அழியும் நிலையில் உள்ள மொழிகள், பொதுக்கல்வி, பல்கலாசாரங்கள், கலாசார வளங்களைப் பாதுகாத்தல், தொட்டுணர முடியாத கலாசாரத்தை கண்டறிவதற்கான ஐக்கிய நாடுகளின் (UN) முயற்சியே, Masterpieces of the oral Intangible Heritage of Humanity என்பதாகும். கலாசார வளங்களின் முகாமையானது, கலாசார மரபுரிமையின் அரிய விடயங்களை பாதுகாத்தல், மற்றும் முகாமை செய்தலாகும். இது தொல்பொருளியலைப் போன்று பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன கலாசார சூழல், தொல்பொருள் ஆய்வு இடங்கள், வரலாற்று ஆவணங்கள், பழைய கட்டடங்கள், சமய நம்பிக்கைகள், சமூக நிறுவனங்கள் வெளிப்படுத்துகின்ற கலாசாரம், கைத்தொழில் மரபுரிமை, நாட்டார் வாழ்வு, கலைப்பொருட்கள் மற்றும் ஆன்மீக இடங்கள் என்பன உள்ளடங்குகின்றது. இவற்றை மிக வேகமாக முகாமைப்படுத்துவதனூடாக பல இடங்கள் மறைந்து போனாலும் , இவ் பாதுகாக்கும் முயற்சிகளால் வருங்கால சந்ததியினருக்கு ஏராளமான தகவல்களை பாதுகாக்க முடியும்.

**நிறைவுரை**

இலங்கைத் தொல்லியற் சட்டத்தில் இற்றைக்கு 100 ஆண்டுகளிற்கு முற்பட்ட பெறுமதியுடைய அனைத்துச் சின்னங்களும் இந்நாட்டின் மரபுரிமைச் சின்னங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. அவற்றின் அடிப்படையில் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் 2010 இல் இருந்து வட இலங்கையில் உள்ள கண்ணுக்கு புலப்படும் நூற்றுக்கணக்கான மரபுரிமைச்சின்னங்களை ஆவணப்படுத்தியுள்ளது. அம்மரபுரிமைச் சின்னங்கள் வட இலங்கைக்கு 3000 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு என்பதை வெளிச்சம் போட்டுகாட்டுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் மரபுரிமைப் பாரம்பரியங்களை பேணிப்பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1) Rasanayagam, C., (1926), *Ancient Jaffna*, A.S., Everyman's Publishers Ltd, Madras.
2) Rev.Ganapirakasar, (1928), *A Critical History of Jaffna: The Tamil Era*,Achuvely.
3) Ragupathy, p., (1987), "*Early Settlements in Jaffna*", Sundarsan Graphics, T.Nager, Madras – 600017.
4) Sitrampalam.C.K, (1992), *Kingdam of Jaffna*, University of Jaffna.
5) Indrapala.K., (1971), *The Origins of the Jaffna Kingdom*, National printers, Kandy.
6) Pushparadnam, P., (2014), *Tourism and Monuments of Archaeological Heritage in Northern Sri Lanka*, Express Newspapers (Ceylon) (Pvt) Ltd.
7) *Henry Cleere., (2000), Archaeological Heritage Management in the Modern Word, USA and Canada by Routledge, 270 Madison Ave, New York NY 10016.*
8) *Derek Linstrum, (1976), The Conservation of Historic Towns and Monuments, Commonwealth Foundtion, London.*